செய்தி வெளியீடு எண். 50 நாள்: 24.01.2018

**பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பாக தீவிர போலியோ சொட்டுமருந்து முகாம் 28.01.2018 (ம) 11.03.2018 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளது- மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது :

திருவள்ளுர் மாவட்டத்தில் 28.01.2018 (ம) 11.03.2018 அன்று ஐந்து வயதிற்குட்பட்ட சுமார் 2,43,383 குழந்தைகளுக்கு 1,271 நிலையான மையங்களிலும், மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் 70 மையங்களிலும் மற்றும் 43 நடமாடும் மையங்கள் மூலமாகவும் மொத்தமாக 1,384 முகாம் மூலமாகவும் தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் இரண்டு தவணையாக நடைபெறவுள்ளது.

இரண்டு தவணை போலியோ சொட்டு மருந்துகளை ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், நகராட்சி மருத்துவமனைகள், ஊட்டசத்து மையங்கள், பள்ளிகள் போன்ற இடங்களில் முகாம்கள் அமைக்கப்பட்டு, சொட்டு மருந்து கொடுக்கப்படவுள்ளது. மேலும் செங்கல் சூளைகள், பெரிய அளவிலான கட்டுமானப்பணிகள் நடைபெறும் இடங்கள், குடிசைப்பகுதிகள், ஆந்திர மாநில எல்லைப்பகுதியில் உள்ள கிராமங்கள், நரிக்குறவர்கள் வாழும் பகுதிகள் மற்றும் கடற்கரையோரப் பகுதிகள் ஆகிய இடங்களிலுள்ள குழந்தைகளுக்கு சிறப்பு முகாம்கள் வாயிலாக சொட்டு மருந்து வழங்கப்பட்டுள்ளது.

இந்த போலியோ சொட்டு மருந்து முகாமில் சுகாதார துறையினைச் சார்ந்த 510 பணியாளர்களும், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட துறை 1,718 பணியாளர்களும், 3,066 தன்னார்வ தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்களும், அரசு சாரா நிறுவன 31 பணியாளர்களும் ஆக மொத்தம் 5,325 பணியாளர்களும் சொட்டு மருந்து பணிக்காக ஈடுபடுத்தப்படவுள்ளனர். ஒவ்வொரு துறையினர் இம்முகாமில் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து அறிவுறுத்தப்பட்டு, அனைத்து துறையினரும் முழு ஈடுபாட்டுடன் இம்முகாமில் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று கூறினார்.

இக்கூட்டத்தில் இணை இயக்குநர் (மாவட்ட மருத்துவ மற்றும் ஊரக நலப் பணிகள்) மரு. பி.வி.தயாளன், துணை இயக்குநர்கள் (சுகாதாரப் பணிகள்) மரு.ஜே.பிரபாகரன் (திருவள்ளுர்), மரு. கே.கிருஷ்ணராஜ் (பூவிருந்தவல்லி), மாநில போலியோ தடுப்பு அலுவலர், மரு. சுரேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளுர்.**